**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 79** **நாள்: 05.06.2016**

**ஆலந்தூர் அருகே மணப்பாக்கம் கால்வாய் தூர்வாரும் பணி தீவிரம்!**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருக்கும், மாநகராட்சி நிர்வாகத்திற்கும்**
**பொது மக்கள் நன்றி!**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையாளர் டாக்டர்.பி.சந்தரமோகன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி மக்களுக்கான பல்வேறு அடிப்படை வசதிகள் மற்றும் கால்வாய் தூர்வாரும் பணியினை சிறப்பாக செய்து வருகிறது.

ஆலந்தூர் மண்டலம் மணப்பாக்கத்திற்குட்பட்ட ரீஜன்சி அவதியா அபார்ட்மென்ட்ஸ், ஜெயின் அபார்ட்மென்ட்ஸ், சத்யா நகர் மற்றும் பட்டிய கார்டன் பின்புறம் உள்ள மணப்பாக்கம் கால்வாய் பகுதிகளில் தூர்வாரும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த பணியினை பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பொதுப் பணித்துறை இணைந்து மேற்கொண்டு வருகிறது.

கடந்த ஆண்டு பெய்த கனமழையின் போது கால்வாய் மூலம் மழை வெள்ளம் அதிக அளவில் வந்ததால் இப்பகுதி மிகவும் பாதிக்கப்பட்டது. மாநகராட்சி நிர்வாகத்தின் துரித முயற்சியினால் இப்பகுதி மக்கள் எவ்வித சேதமும்மின்றி காப்பாற்றப்பட்டனர். மீண்டும் மழை வரும்போது அத்தகைய பாதிப்பு வரகூடாது என்பதால் பொதுமக்களின் நலன் கருதி மணப்பாக்கம் கால்வாய் தூர்வார வேண்டும் என்று பொதுநலச்சங்கள் கோரிக்கை வைத்தனர். கடந்த செவ்வாய் அன்று மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையாளர் டாக்டர்.பி.சந்தரமோகன், இ.ஆ.ப., அவர்களும் இப்பகுதியில் நேரில் சென்று பெதுநலச்சங்களை சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டுயறிந்ததோடு கால்வாய் பகுதிகளில் பார்வையிட்டனர்.

இக்கோரிக்கையும், பிரச்சனையும் உடனடியாக சென்னை மாநகராட்சி நிர்வாகம் மற்றும் பொதுப்பணித்துறையும் இணைந்து இக்கால்வாயை தூர்வார வேண்டும் என்று உத்தரவிட்டனர். அதற்கு இனங்க கடந்த வியாழன் முதல் தூர்வாரும் பணி இக்கால்வாயில் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இப்பணியை பார்வையிட்ட பொது மக்கள் எங்கள் கோரிக்கையை உடனே நிறைவேற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும், பெருநகர சென்னை மாநகராட்சி நிர்வாகத்திற்கும் நன்றி தெரிவித்தனர்.

பொது நலச்சங்கத்தின் உறுப்பினர்கள் திரு. அரவநாதன், திரு. மோகன் மற்றும் திரு. கஜபதி ஆகியோர் கூறியது கடந்த ஆண்டு பெய்த கன மழையின் போது கால்வாயில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் இப்பகுதி மிகவும் பாதிக்கப்பட்டது. இப்பொது இக்கால்வாயில் மழை வெள்ளத்தினால் சேதம் ஏற்படா வண்ணம் கால்வாய் தூர்வாரும் பணி நடைபெற்றுவருகிறது. இப்பணியினை விரைவாக நிறைவேற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும், பெருநகர சென்னை மாநகராட்சி நிர்வாகத்திற்கும் அவர்கள் நன்றி தெரிவித்தனர்.

இப்பணியினை காஞ்சிபுரம் மேற்கு மாவட்ட செயலாளர் திரு. மு. காமராஜ், 157வது மாமன்ற உறுப்பினர் திரு. மு. பாண்டியன் அவர்கள் மற்றும் அப்பகுதியில் உள்ள பொது மக்கள் பார்வையிட்டனர்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**